# தஞ்சாவூர் மாநகராட்சி

| Date of Meeting | Serial Number and subject in the Agenda ( MEETING) | Decision of the City Corporation |
|---|---|---|
| 29.10.2020 | **301.** இம்மாநகராட்சியின் ஆணையாளர் அவர்களின் செப்டம்பர்–2020ம் மாதத்திய நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>பதிவு செய்யலாம். (ந.க.எண்.7826/2019/சி5) | பதிவு செய்யப்பட்டது |
| 29.10.2020 | **302.** தமிழ்நாடு அரசிதழ் எண்.260, நாள் 01.07.2020–ல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை எண்.XIII, அரசாணை எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 01.07.2020–ல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலத்தை 31.12.2020 வரை நீட்டித்து உரிய திருத்தம் செய்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.10700/2016/ சி1) | பதிவு செய்யப்பட்டது |
| 29.10.2020 | **303.** 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (திருத்தப்பட்டுள்ளபடி) பிரிவு–15ன்கீழ் இதனடியில் குறிப்பிட்டுள்ள செலவினம் மற்றும் வேலையினத்தினை கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக பணியின் அவசர அவசியம் கருதி, உள்ளூர் ஒப்பந்ததாரர்கள்/ நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. ஆர்.எம்.என்ஜினியரிங் ஒர்க்ஸ், நாகப்பட்டினம் என்ற நிறுவனத்தினால் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | பதிவு செய்யப்பட்டது |

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட செலவினம் அல்லது வேலை | பிரிவு–15ன் கீழ் அனுமதி அளிப்பதற்கான காரணங்கள் | உத்தேச செலவினத் தொகை |
|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளின் கீழ் பணிகள் – தஞ்சாவூர் மாநகராட்சி – தஞ்சாவூர் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்ட பராமரிப்பு பணிகளின் வார்டு எண்.36 வ.உ.சி.நகர் பகுதியில் முற்றிலும் சேதமடைந்துள்ள 600mm Dia RCC குழாய்களை அகற்றி புதிய குழாய்கள் அமைத்தல் மற்றும் ஆள் இறங்கு குழிகள் அமைக்கும் பணி | பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகள் முழுவதும் சேதமடைந்து கழிவு நீர் முற்றிலும் சாலைகளில் வெளியேறி அருகில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை அலுவலகம் மற்றும் இரயில்வே குடியிருப்பு போன்ற பகுதிகளில் சென்று சுற்றுப்புற சுகாதார சீர்கேடு மற்றும் பொது மக்களுக்கு தொற்று நோய் பரவும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்கீழ் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | ரூ.5,50,000/–க்கு (ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு:</u><br>மாமன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1355/2020/எம்சிஇ4) | |
| 29.10.2020 | **304.** Tamil Nadu Municipal Manual Volume-I Sl.No.37 Disposal of obsolute Electoral Rolls மற்றும் The Conduct of Elections Rules 1961 Section 94-Disposal of Election Papers ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, இம்மாநகராட்சியில் கடந்த 2011ஆம் ஆண்டு நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தல்–2011 தொடர்பான வாக்காளர் பட்டியல் மற்றும் இதர ஆவணங்களை கிழித்து, அழித்து எடைக்கு எடுத்துக்கொள்ளும் பணிக்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, 29.09.2020 அன்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 3 எண்ணிக்கையிலான விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ. எண்</th><th>உள்ளூர் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>விலைப்புள்ளி தொகை (கிலோ ஒன்றுக்கு )</th></tr><tr><td>1.</td><td>M/s. இ.மோகன், பழைய பேப்பர் ஸ்டோர்ஸ், எண்.455ஏ/200, அண்ணா சாலை, கீழவாசல், தஞ்சாவூர்</td><td>ரூ. 6.00</td></tr><tr><td>2.</td><td>M/s. பாக்யா ஏஜென்சீஸ், எண்.262, கொள்ளுப்பேட்டை தெரு, கீழவாசல், தஞ்சாவூர்</td><td>ரூ. 3.50</td></tr><tr><td>3.</td><td>M/s. ஈஸ்வரி டிரேடர்ஸ், எண்.2790/பி, ஏ.ஒய்.ஏ.நாடார் ரோடு, கீழவாசல், தஞ்சாவூர்</td><td>ரூ. 3.00</td></tr></table>மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு விலைப்புள்ளி கோரியதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. இ.மோகன், பழைய பேப்பர் ஸ்டோர்ஸ், தஞ்சாவூர் நிறுவனத்தின் உயர்ந்தபட்ச விலைப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.9040/2020/எம்சிஏ1) | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.10.2020 | 305. | இம்மாநகராட்சியில் E-Governance திட்டத்தின் கீழ் Leased Line Connectivity for Implementation of Urban Tree Information System வழங்கப்பட்டுள்ள வகையில், அதற்கான Bandwidth கட்டணம் **01.10.2019** முதல் **31.12.2019** வரையிலான மூன்று மாத காலத்திற்கு ரூ.**1,89,670/–** மற்றும் **01.01.2020** முதல் **31.03.2020** வரையிலான மூன்று மாத காலத்திற்கு ரூ.**1,89,670/–** ஆக கூடுதல் தொகை ரூ.**3,79,340/–**ஐ Accounts Officer, M/s.BSNL, Tamil Nadu Circle, Account Number-603805009685 என்ற வங்கிக் கணக்கில் செலுத்திடக்கோரி, நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**29280/2020**/WB, நாள் **25.09.2020**–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.**3,79,340/–**ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினம் ரூ.3,79,340/–க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். செலவினை 2020–21 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மேற்படி நிறுவனத்திற்கு தொகை செலுத்தப்பட்டதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.16393/2019/எம்சிஏ1) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.10.2020 | 306. | இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணாசாலை மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள ஜூபிடர் தியேட்டர் சார்பாக அதன் உரிமையாளர் திரு ஜோசப் பிரான்ஸிஸ் என்பவரால் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்டுள்ள வழக்கு எண். W.P.(MD) No.13722/2020–ல் தஞ்சாவூர் மாநகராட்சி சார்பாக உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு என்.திலீப்குமார் அவர்களை ஆஜராக கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வழக்கிற்கான கட்டணமாக திரு திலீப்குமார் வழக்கறிஞரிடமிருந்து ரூ.12,000/– (ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) கோரப்பட்டுள்ளதை வழங்கிடவும், இதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) வழக்கின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை மாமன்றம் ஏற்கலாம்.<br>3) செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.25883/2003/எம்சிஏ5) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>29.10.2020</td>
<td>307.</td>
<td>இம்மாநகராட்சிக்கு தேவையான வகையில் கோவிட்–19 கட்டுபாட்டு அறையில் பராமரிக்கப்படும் கணினிகளுக்கு தினசரி அறிக்கை தயார் செய்ய New Tonner 78A Supply செய்து தர ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் விலாசம்</th><th>78A ஒரு டோனரின் விலை</th></tr>
<tr><td>1.</td><td>Kalai System, Yagappa Nagar, Thanjavur</td><td>ரூ. 1500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்)</td></tr>
<tr><td>2.</td><td>Arunkumar, OM-7 Communication,<br>RR Nagar, Thanjavur</td><td>ரூ. 1650/– (ரூபாய் ஆயிரத்து அறநூற்று ஐம்பது மட்டும்)</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்குறிப்பிட்டுள்ளவாறு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ள Kalai System நிறுவனத்திற்கு விநியோகிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொருட்கள் வாங்கியதை அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.5242/டி1/2020)</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.10.2020</td>
<td>308.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான சிவகங்கை பூங்காவின் முகப்பில் உள்ள அலுவலக அறைக்கு அருகில் இருந்த இலுப்பை மரம் தற்போது பெய்த மழையின் காரணமாக வேரோடு சாய்ந்து நுழைவாயில் முன்பகுதியில் விழுந்து, கிளைகள் படர்ந்துள்ளது. எனவே உதவி பொறியாளர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மேற்படி மரத்தை வெட்டி அப்புறப்படுத்த பொது ஏலம் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.9628/2020/எம்சிஇ1)</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.10.2020</td>
<td>309.</td>
<td>இம்மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 4 எண்ணிக்கையிலான கணினி வரி வசூல் மையங்கள், 4 எண்ணிக்கையிலான பிறப்பு இறப்பு சான்று வழங்கும் மையங்கள் மற்றும் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் (கணினிகள்–50 எண்ணிக்கை, All in one Computer-7 Nos, கணினி கிராபிக்ஸ் உடன் கூடியது–1 எண்ணிக்கை லேப்டாப்–8 எண்ணிக்கை, லேசர் ஜெட் பிரிண்டர்–30 எண்ணிக்கை, All in one Printer-6 எண்ணிக்கை, Dot Matrix Printer-11 எண்ணிக்கை, Scanner-5) ஆகியவற்றினை ஆண்டு பராமரிப்பு பணியில் (AMC) ஈடுபட்டு வரும் M/s. Cashew Systems நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.03.2020 உடன் முடிவடைந்துள்ள– மேலும் உதவி திட்ட கணினி அமைப்பாளர் அவர்கள் குறிப்பின்படி ஒரு வருட காலத்திற்கு (1.11.2020 முதல் 31.10.2021 வரை) கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பராமரிப்பு பணி மற்றும் 10 எண்ணிக்கையிலான முற்றிலும் பழுதடைந்த CRT Monitorகளுக்கு பதில் புதிய LED Monitorகளை வாங்கி பொருத்தும் பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10,00,000/–ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அங்கீகரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) கணினிகள் மற்றும் பிரிண்டர்களின் ஆண்டு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கென தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1709/2020/எம்சிஇ1)</td><td></td></tr>
<tr><td>29.10.2020</td><td>310.</td><td>தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான சிவகங்கை பூங்காவின் முகப்பில் உள்ள அலுவலக அறைக்கு அருகில் இருந்த இலுப்பை மரம் தற்போது (7.10.2020) அன்று பெய்த மழையின் காரணமாக வேரோடு சாய்ந்து நுழைவாயில் முன்பகுதியில் விழுந்து, சிவகங்கை பூங்காவிற்குள் நுழைய இயலாத நிலையில் உள்ளது. அதனை அப்புறப்படுத்தும் பணிக்கு 19.10.2020 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்</th><th>ஏலம் கோரியவரின் பெயர்</th><th>உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.</th></tr><tr><td>1.</td><td>திரு R.தென்னரசன், 2/145–மேல தெரு, வடக்கால், தஞ்சாவூர்–1</td><td>ரூ. 3,100/–</td></tr><tr><td>2.</td><td>திரு R.முருகன், 708–கீழ் அலங்கம், தஞ்சாவூர்–613 001</td><td>ரூ. 3,200/–</td></tr></table>மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு பொது ஏல ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.2ல் கண்ட திரு R.முருகன், 708–கீழ் அலங்கம், தஞ்சாவூர்–613001 என்ற ஏலதாரர் ரூ.3,200/–க்கு கூடுதல் ஏலதொகை பதிவு செய்துள்ளார். மேற்படி உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரியுள்ளதை ஏற்று வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) கூடுதலாக பொது ஏல ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு R.முருகன், 708–கீழ் அலங்கம், தஞ்சாவூர்–613001 என்பவரது ஏல விலைப்புள்ளி தொகை அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக ரூ.3,200/–ஐ கோரி உள்ளார். எனவே மேற்படி உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் குறிப்பின்படி நியாயமான தொகையாக (Reasonable Rate) இருப்பதால் அதனை ஏற்கலாம்.<br>2) பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி முழு தொகையும் அலுவலகத்தில் செலுத்திய பின்பு வேலை ஆணை வழங்கலாம்.<br>(ந.க.எண்.9628/2020/எம்சிஇ1)</td><td>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 29.10.2020 | **311.** | தஞ்சாவூர் மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு "ஏ" வகுப்பு அங்கீகாரத்தினை புதுப்பித்திடுவதற்காக போக்குவரத்து வாகன ஆய்வாளர் அவர்களால் புதிய பேருந்து நிலையத்தில் ஆய்வு செய்யப்பட்டு, ஆண் மற்றும் பெண்களுக்கு என தனியாக பயணிகள் காத்திருப்பு அறை கிரில் வைத்து அமைத்து தர வேண்டுமென தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.5828/அ2/2017, நாள் 18.05.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு அறை கிரில் வசதியுடன் அமைத்து தரும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4,35,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகரிக்கவும், மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.4,35,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>4) தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.5828/அ2/2017, நாள் 18.05.2020 மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.8846/2020/எம்சிஇ4) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.10.2020 | **312.** | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 சேவப்பநாயக்கன்வாரி தென்கரையில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தின் பழுதுகளை சீர் செய்து தருமாறு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், தஞ்சாவூர் அவர்கள் தனது 26.02.2020ஆம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.<br>மாநகராட்சி பராமரிப்பில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதியினை செய்து தர வேண்டியதன் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், குழந்தைகளின் நலன் கருதியும், மேற்படி குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரின் வேண்டுதலுக்கிணங்கவும், தஞ்சாவூர் சேவப்பநாயக்கன்வாரி தென்கரை அங்கன்வாடி கட்டிடத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்யும் பணியினை மேற்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.50/– இலட்சத்தினை (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கல்வி நிதியில் இருந்து செலவிடவும், மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | <u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.8.50/– இலட்சத்தினை (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து கல்வி நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், தஞ்சாவூர் அவர்களின் 26.02.2020ஆம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2619/2020/எம்சிஇ4) | |
| 29.10.2020 | 313. | இம்மாநகராட்சியில் வார்டு எண்.36 பொன் நகர் பகுதியில் ரூ.8.50/– இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து பொன் நகர், அண்ணாமலை நகர், JJ நகர் மற்றும் பொன் நகர் கீழ்வாரி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்திடும் பணிக்கு இவ்வலுவலக வேலை உத்திரவு ந.க.எண்.5053/2020/எம்சிஇ4, நாள் 17.07.2020ன்படி திரு எஸ்.மகேந்திரன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி போர்வெல்லில் 2” (இன்ச்) அளவு மட்டுமே நீர் சப்ளை செய்வதால் மேற்படி குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள கடைநிலை பகுதிகளுக்கு போதிய அளவு குடிநீர் வழங்க இயலவில்லை. இந்நிலையில் மேற்படி குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொன் நகர் பூங்காவில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 6” (இன்ச்) ஆழ்குழாய் கிணற்றினை பரிசீலனை செய்யும்பொழுது அதில் போதிய அளவு குடிநீர் உள்ளது தெரியவருகிறது. எனவே அந்த ஆழ்குழாய் கிணற்றில் ஏற்கனவே பழுதடைந்த மின் மோட்டாரை அகற்றிவிட்டு புதியதாக ஒரு 5 HP மின் மோட்டாரை பொருத்தி கடைநிலை பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கிடவும், அதற்கான செலவினத்தை ஏற்கனவே வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டில் செலவினம் மேற்கொண்டது போக மீதமுள்ள தொகையில் ஈடு செய்து கொள்ளவும், மேற்படி மின் மோட்டாரை அதே ஒப்பந்ததாரர் மூலம், அதே ஒப்பந்த விலை விகிதத்தில் பணியின் அவசர அவசியம் கருதி சப்ளை செய்ததை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>இப்பணி பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க வேண்டிய அவசர அவசியம் கருதி அதே ஒப்பந்ததாரர் மூலம், அதே விலை விகிதத்தில் பணி மேற்கொண்டதை அங்கீகரித்து மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5053/2020/எம்சி4) | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 29.10.2020 | 314. | மாமன்னன் ராஜராஜசோழன் 1035வது ஆண்டு சதய விழா எதிர்வரும் 26.10.2020ம் தேதி வெகு விமரிசையாக கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு மாமன்னன் இராஜராஜ சோழன் சிலைக்கு தற்காலிக மரப்படிகள் அமைத்தல், சோழன் சிலைக்கு மின் விளக்குகளால் அலங்காரம் செய்தல், சுற்றுச்சுவருக்கு வர்ணம் பூசுதல், வெளிப்புற வாயில் அருகில் அலங்காரம் செய்தல், குடிநீர் வசதி செய்தல், சுகாதார பணிகள் மேற்கொள்ளுதல் தடுப்புகள் அமைத்தல், தற்காலிக கழிவறை அமைத்தல் மற்றும் Hand Wash Unit-2 Set அமைத்தல் ஆகிய பணிகளை செய்து தருமாறு உதவி ஆணையர், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர் அவர்களின் 07.10.2020ம் தேதிய கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.<br>அதனடிப்படையில் வருடாவருடம் இம்மாநகராட்சியால் செய்து கொடுப்பது போலவே, மாமன்னன் ராஜராஜசோழன் 1035வது ஆண்டு சதய விழாவினை முன்னிட்டு மாமன்னன் இராஜராஜ சோழன் சிலைக்கு தற்காலிக மரப்படிகள் அமைத்தல், சோழன் சிலைக்கு மின் விளக்குகளால் அலங்காரம் செய்தல் மற்றும் தடுப்புகள் அமைத்தல், தற்காலிக கழிவறை அமைத்தல் மற்றும் Hand Wash Unit-2 Set அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 2020–2021 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியினை எதிர்நோக்கி மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகியகால ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) உதவி ஆணையர், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர் அவர்களின் 07.10.2020ஆம் தேதிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.9782/2020/எம்சிஇ4) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.10.2020 | 315. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 சீனிவாசபுரம் குப்பைக் கிடங்கில் குப்பைகள் கொட்ட வரும் இம்மாநகராட்சி வாகனங்களுக்கு பாதை அமைத்து கொடுப்பது மற்றும் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை JCB மற்றும் HITTACHI இயந்திரங்களை கொண்டு சமன்படுத்துவது போன்ற பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.14,00,000/–ஐ (ரூபாய் பதினான்கு இலட்சத்தினை மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 10.08.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 01.09.2020 அன்று | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது |

ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு G.செந்தில்குமார், தஞ்சாவூர் | **12,29,400.00** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.05**% குறைவு |
| 2. | திரு L.ராஜ்குமார்ராவ், தஞ்சாவூர் | **12,33,000.00** | மதிப்பீட்டு தொகையை விட (+) **0.24**% அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு G.செந்தில்குமார், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7403/2020/எம்சிஇ4)

**29.10.2020**

**316.**

தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.37 சாந்திவனம் சுடுகாட்டில் உள்ள நவீன எரிவாயு தகனமேடை தற்போது பழுதுகள் சீர்செய்யப்பட்டு இயக்குவதற்கு தயார் நிலையில் உள்ளது. தற்போது கொரோனா 19ன் காரணமாக இறப்பு விகிதம் அதிகமாக வாய்ப்புள்ளதால் மேற்படி சாந்திவனம் சுடுகாடு நவீன எரிவாயு தகனமேடையினை அவசர அவசியம் கருதி பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக முதற்கட்டமாக 6 மாதங்களுக்கு மட்டும் சாந்திவனம் சுடுகாடு – நவீன எரிவாயு தகன மேடை இயக்குதல் மற்றும் பராமரித்தல் (Operating & Maintanance) பணி மற்றும் பிரேத தகனம் செய்யும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,50,000/–ஐ (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 01.04.2020 வழங்கப்பட்டு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்கு 09.04.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளளாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. MHT Engineering, Chennai-32 | **5,34,000.00** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.31**% குறைவு |
| 2. | M/s. YesYes Jee Engineering, Chennai-23 | **5,64,000.00** | மதிப்பீட்டு தொகையை விட (+) **5.222**% அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td colspan="2">
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு விலையை விட (–) 0.31% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. MHT Engineering, Chennai-32 என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4133/2020/எம்சிஇ4)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.10.2020</td>
<td>317.</td>
<td>
தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.49ல் அமைந்துள்ள அண்ணா நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி இந்த ஆண்டு மாணவர்கள் தேர்வு மையமாக செயல்பட இருப்பதாகவும், எனவே மாணவர்களின் நலன் கருதி அடிப்படை வசதிகளான காற்றோட்ட வசதி, வெளிச்சம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து தருமாறு தலைமை ஆசிரியர், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, அண்ணா நகர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் நாள் 27.05.2020–ல் கோரப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அண்ணா நகர் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் அடிப்படை வசதிகள், பழுதுகளை சீரமைத்து தரும் பணிகளை மேற்கொள்ளுவதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.48.50 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்தெட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 08.09.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 23.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு T.மனோகர், தஞ்சாவூர்</td><td>41,31,960.27</td><td>மதிப்பீட்டு தொகையை விட (–) 0.08% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு G.செந்தில்குமார், தஞ்சாவூர்</td><td>41,54,810.04</td><td>மதிப்பீட்டு தொகையை விட (+) 0.47% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு T.மனோகர், தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5118/2020/எம்சிஇ4)
</td>
<td>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>29.10.2020</td>
<td>318.</td>
<td>தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33ல் GA Canal South Bank சாலை பகுதியில்</td>
<td>அலுவலக குறிப்பு</td>
</tr>
</table>

வெடிப்பு காரணமாக சேதமடைந்துள்ள 600mm PSC பாதாள சாக்கடை வடிகால் இணைப்பு குழாய்களை 10.5 M நீளத்திற்கு புதிதாக மாற்றி அமைக்கும் பணிகளை மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.5,67,000/–க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபத்தி ஏழாயிரம் மட்டும்) ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 24.04.2020ல் பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டுள்ளது. இப்பணிக்கு 07.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு S.கோபி, தஞ்சாவூர் | **5,00,369.40** | மதிப்பீட்டு தொகையை விட (–) **0.01**% குறைவு |
| 2. | திரு S.ரமேஷ், தஞ்சாவூர் | **5,09,529.00** | மதிப்பீட்டு தொகையை விட (+) **1.82**% அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள மதிப்பீட்டு தொகையை விட (–) 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு S.கோபி, தஞ்சாவூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4529/2020/எம்சிஇ4)

ஏற்கப்பட்டது

---

**29.10.2020** **319.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN49 C 4840 வாகனத்திற்கு 12 வோல்ட் 1500 AH அளவு கொண்ட 1 எண்ணிக்கை புதிய மின்கலன் சப்ளை செய்யும் பணிக்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 04.09.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s. சரவணன் பேட்டரி சென்டர், தஞ்சாவூர்–7 | ரூ. **13,300/–** |
| 2 | M/s. கார்த்திக் பேட்டரி சென்டர், தஞ்சாவூர்–7 | ரூ. **13,700/–** |
| 3 | M/s. தீன் பேட்டரி ஒர்க்ஸ், தஞ்சாவூர் | ரூ. **13,900/–** |

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1) மேற்கண்ட பணிக்கென வரப்பெற்ற விலைப்புள்ளியில் வ.எண்.1ல் கண்ட M/s. சரவணன் பேட்டரி சென்டர், தஞ்சாவூர் என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.13,300/–ஐ மாமன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | 2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020–21 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.3331/2020/எம்சிஇ5)** | |
| **29.10.2020** | **320.** | இம்மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட 13 வாகனங்கள் நீண்ட நாட்களாக ஓடாமல் முற்றிலும் பழுதடைந்து துருப்பிடித்து பயனற்ற நிலையில் உள்ளது. எனவே அதனை கழிவு செய்து பொது ஏலத்தில் விட வேண்டியுள்ளதால் அதற்கு வட்டார போக்குவரத்து அலுவலரிடம் (Contempt Certificate) கழிவு சான்று பெற வேண்டியுள்ளதால், மேற்படி வாகனங்களுக்கு செலுத்த வேண்டிய நடப்பு ஆண்டு வரை உள்ள பசுமை வரி, காப்பீட்டு புதுப்பித்தல் கட்டணம் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட இலாகாகளுக்கு செலுத்தினால் மட்டுமே வாகன கழிவு சான்று பெற இயலும். இது சம்பந்தமாக 01.10.2020–ம் தேதியில் நடைபெற்ற வாகன பராமரிப்பு ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு மேற்படி வாகனங்களை கழிவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது. எனவே கீழ்கண்ட விபரப்படியான பட்டியல் தொகையினை செலுத்தவும், அதற்குண்டான செலவினத்தை இம்மாநகராட்சி பொது நிதியில் செலவு செய்யவும், மேலும் இப்பணிக்கு கூடுதல் செலவு ஏதும் ஏற்பட்டால் அதனை செலுத்தவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 01/10/2020–ம் தேதிய வாகன பராமரிப்பு ஆய்வு கூட்டப் பொருளை பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டு அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வாகனத்தின் பெயர் | வாகனத்தின் எண் | பசுமை வரி (Tax Period) | பசுமை வரி தொகை ரூ. | காப்பீடு புதுப்பித்தல் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1 | டம்பர் பிளேசர் | TN 49AA 1629 | 10.01.2017 to 09.01.2021 | 2020.00 | 37401.00 |
| 2 | டிப்பர் லாரி | TN 49 B 1212 | 01.08.2012 to 31.07.2021 | 4545.00 | 31355.00 |
| 3 | மினி லாரி | TN 49 6304 | 01.08.2012 to 31.07.2021 | 5550.00 | 17696.00 |
| 4 | மினி ஆட்டோ | TN 49 L 1318 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 5 | மினி ஆட்டோ | TN 49 L 1316 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 6 | மினி ஆட்டோ | TN 49 L 1324 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 7 | மினி ஆட்டோ | TN 49 L 5648 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 8 | மினி ஆட்டோ | TN 49 L 5649 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 9 | மினி ஆட்டோ | TN 49 L 1323 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 10 | மினி ஆட்டோ | TN 49 L 5653 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 11 | மினி ஆட்டோ | TN 49 L 5650 | 12.03.2014 to 11.03.2021 | 3535.00 | 5253.00 |
| 12 | ஈப்பு | TN 49 B 1271 | 20.12.2010 to 19.12.2020 | 2020.00 | 10683.00 |
| 13 | UGD | TN 49 AD 9158 | 06.10.2010 TO 05.10.2020 | 2020.00 | 6792.00 |
| **Total** | | | | **44435.00** | **145951.00** |

<table>
<tr><td></td><td></td><td>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கான கட்டணத்தொகை ரூ.1,90,386/—ஐ (ரூபாய் ஒரு இலட்சத்தி தொன்னூராயிரத்தி முன்னூற்றி எண்பத்தாறு மட்டும்) செலுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) மேற்கண்ட செலவினத்தை 2020—21ம் வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
4) ந.க.எண்.4703/2019/எம்சிஇ5, நாள் 01.10.2020 கூட்டப் பொருளை பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.16127/2019/எம்சிஇ5)
</td><td></td></tr>
<tr><td>29.10.2020</td><td>321.</td><td>
இம்மாநகராட்சிக்கு சொந்தமான TN49 AR 9344 வாகனத்திற்கு 12 வோல்ட் 35 AH அளவு கொண்ட 1 எண்ணிக்கை புதிய மின்கலன் சப்ளை செய்யும் பணிக்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து 20.08.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதனை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>M/s. முருகன் பேட்டரி ஒர்க்ஸ், தஞ்சாவூர்</td><td>ரூ. 4,450/—</td></tr>
<tr><td>2</td><td>M/s. ஆதிபராசக்தி பேட்டரி சென்டர், தஞ்சாவூர்</td><td>ரூ. 4,500/—</td></tr>
<tr><td>3</td><td>M/s. ஆனந்த் பேட்டரி ஒர்க்ஸ், தஞ்சாவூர்</td><td>ரூ. 4,550/—</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1) மேற்கண்ட பணிக்கென வ.எண்.1ல் கண்ட M/s. முருகன் பேட்டரி ஒர்க்ஸ், தஞ்சாவூர் என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.4,450/—ஐ மாமன்றம் ஏற்கலாம்.<br>
2) மேற்கண்ட பணிக்கான செலவினை 2020—21 வருடத்திய திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3) பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி, மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண்.7618/2020/எம்சிஇ5)
</td><td>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td>29.10.2020</td><td>322.</td><td>
தஞ்சாவூர் மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பழைய பேருந்து நிலையம், திருவையாறு பேருந்து நிலையம் மற்றும் சிவகங்கை பூங்கா ஆகிய இடங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மேற்படி பழைய பேருந்து நிலையம், திருவையாறு பேருந்து நிலையங்களில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட ஆங்கிள்கள், டின்சீட், போல்ட் நெட் மற்றும் பழுதடைந்த இரும்பு இருக்கைகள் மற்றும் சிவகங்கை பூங்காவில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட Train Tracks, Train box, கைப்பிடிகள், வழித்தட கைப்பிடிகள், இரும்பு போல்ட் மற்றும் பயனற்ற மரங்கள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி
</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | கோரி பகிரங்க ஏலம் விடுவதற்கும், இதற்கான அறிவிப்பு விளம்பரத்தினை தினமணி நாளிதழில் 23.01.2020 அன்று பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கும் விளம்பர கட்டணத்தொகை ரூ.4,183/– வரப்பெற்றது. மேற்கண்ட பட்டியல் தொகையினை M/s. Express Publications (Madurai) Private Ltd., என்ற நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) அனுமதி வழங்கலாம்.<br>2) விளம்பர கட்டணம் செலுத்துவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.15378/2019/எம்சிஇ6) | |
| 29.10.2020 | 323. | இம்மாநகராட்சியில் உள்ளாட்சி தேர்தல்–2019 இட ஒதுக்கீடு தொடர்பாக திரு எஸ்.ஆளவந்தார், த/பெ.சீனிவாசன், எண்.5, தெற்கு தெரு, பள்ளியக்கிரஹாரம், தஞ்சாவூர் என்பவரால் இம்மாநகராட்சிக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு WP (MD) No.23886/2019–ல் மாநகராட்சி சார்பாக மாநகராட்சி வழக்கறிஞர் திரு என்.திலீப்குமார் என்பவரால் ஆஜரான வகையில் அதற்கான பட்டியல் தொகை ரூ.12,000/–ஐ வழங்கிட அன்னாரால் கோரப்பட்டுள்ளது. எனவே மாமன்ற வழக்கறிஞருக்கு மேற்படி தொகை ரூ.12,000/–ஐ வழங்கிடவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) மேற்கண்ட வழக்கிற்கான செலவினம் ரூ.12,000/–க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். செலவினை 2020–21 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியில் செலவிட மாமன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.5199/2019/எம்சிஎப்1) | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 29.10.2020 | 324. | தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வலுவலக உத்திரவின்படி 01.03.2017 முதல் 01.03.2020 வரை மூன்று வருட காலத்திற்கு Relyon Facility Services Pvt. Ltd., சென்னை நிறுவனத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 250 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. தற்போது ஒப்பந்தக்காலம் 01.03.2020 உடன் முடிவடைந்த நிலையில் மேற்படி ஒப்பந்தத்தை 02.03.2020 முதல் 31.10.2020 வரை நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது. தற்பொழுது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் நடைபெற்று வருவதால் மேற்படி தனியார் துப்புரவு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெற இயலாத காரணத்தினால் மேற்படி ஒப்பந்தத்தை 01.11.2020 முதல் 31.12.2020 வரை 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் (61 X 250 X 501) ரூ.76,40,250/– (ரூபாய் எழுபத்தாறு இலட்சத்தி நாற்பது ஆயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)–க்கு மாமன்ற அனுமதி தேவைப்படுகிறது. | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

அலுவலகக்குறிப்பு:

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களது முன் ஒப்புதல் பெற்று மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4296/2017/எச்8)

29.10.2020

325. தஞ்சாவூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திடக்கழிவுகளை குறைத்திடும், மறுசுழற்சி மற்றும் மீண்டும் பயன்படுத்தும் வழிமுறைகளை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு பரப்புரையாளர்கள், மண்டல மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பணி நியமனம் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.26458/2018/பி1, நாள் 24.07.2020–ன்படி மதிப்பீடு ரூ.31.64 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 10.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | விலை குறைப்பு செய்த பின் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s. MSG Infra, No.94 கருப்ஸ் நகர், நெ.1 வல்லம் ரோடு, நீலகிரி தெற்கு தோட்டம், தஞ்சாவூர் | ரூ.33,22,080/– | 5.11% மதிப்பீட்டை விட கூடுதல் | ரூ. 31,58,100/– 0.08 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு டி.மனோகர், தஞ்சாவூர் | ரூ.33,73,740/– | 6.75% மதிப்பீட்டை விட கூடுதல் | கேள்வி எழவில்லை |

அலுவலகக்குறிப்பு:

1) வரிசை எண்.3–ல் கண்டுள்ள M/s. MSG Infra, No.94, கருப்ஸ் நகர், நெ.1 வல்லம் ரோடு, நீலகிரி தெற்கு தோட்டம், தஞ்சாவூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 5.11% கூடுதலாக இருந்ததால் இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.7006/2020/எச்8, நாள் 14.09.2020–ன்படி விலை குறைப்பு செய்து தர கோரியதில் மேற்படி நிறுவனம் தனது 15.09.2020 நாளைய கடிதத்தில் மதிப்பீட்டைவிட 0.08% குறைவாக வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | 2) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மாமன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.7006/2020/எச்8) | |

நாள் : 02.11.2020
இடம்: தஞ்சாவூர்.

ஒம்./ பு.ஜானகி இரவீந்திரன்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.

// உண்மை நகல் //

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்.
தஞ்சாவூர் மாநகராட்சி.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது. (முகாம் அலுவலகம்)
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–600 028 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, உடன் தணிக்கை பிரிவு, தஞ்சாவூர் மாநகராட்சி.

நகல் உதவி திட்ட அமைப்பாளர், தஞ்சாவூர் மாநகராட்சி (மாநகராட்சி இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய)
„ சி5–மாமன்றக்கூட்ட எழுத்தர்.
„ அலுவலக விளம்பர பலகை.